தினமலர் திருச்சி 31-5-2002 9



# மெலட்டூரில் கம்ச சரித்திர நாடகம்

தஞ்சையை அடுத்துள்ள மெலட்டூரில் நரசிம்ம ஜெயந்தியையொட்டி நடைபெறும் பாகவத மேளா நாட்டிய நாடக விழாவில், நேற்று முன்தினம் 'கம்சவதம்' எனப்படும் கம்சசரித்திர நாடகம் நடைபெற்றது. ஸ்ரீ லட்சுமி நரசிம்ம பாகவத மேளா நாட்டிய நாடக சங்கத்தினர் இந்நாடகத்தை நடத்தினர்.

பாகவதத்திலிருந்து எடுக்கப்பட்ட இக்கதைக்கு பாகவத மேளா நாட்டிய நாடக வடிவம் தந்திருப்பவர் மெலட்டூர் வெங்கடராம சாஸ்திரி ஆவார்.

மதுராபுரியின் மன்னரான உக்கரசேன்ரை விலங்கிட்டு சிறையில் தள்ளி, தானே அரசனாகிறான் அவருடைய மகனான கம்சன். கம்சனின் தங்கை தேவகியின் திருமணத்தின் போதே தேவகியின் வயிற்றில் பிறக்கும் எட்டாவது பிள்ளையால் அவனுக்கு மரணம் ஏற்படும் என்று அசரீரி வாயிலாக அறிகிறான். அவளுக்கு பிறக்கும் குழந்தைகளை எல்லாம் கொடூரமாக கொலை செய்யும் கம்சன் எட்டாவது குழந்தையை கருவுற்றிருக்கும் போது தேவகியையும், வசுதேவரையும் சிறையில் வைக்கிறான்.

சிறையில் மகர் விஷ்ணுவே தோன்றி.தேவகி, வசுதேவருக்குக் காட்சி அளித்து, தான் குழந்தையாக உருமாறியதும் கோகுலத்தில் நந்தகோபர் வீட்டில் கொண்டு சென்று விட்டு விடவும், அங்கிருக்கும் குழந்தையை எடுத்து வ்ரவும் ஆலோசனை கூறுகிறார். அவ்வாறே குழந்தைகள் இடம் மாற்றப்படுகின்றன. அப்போதுதான் குழந்தை பிறந்த செய்தியைக் கேள்விப்படும் கம்சன் அக்குழந்தையை கொல்ல முற்படும்போது, அது மாயக்குழந்தையாக விண்ணில் எழுகிறது. அவன் நினைக்கும் குழந்தை தான் இல்லை என்று கூறி, கண்ணன் இருப்பிடத்தையும், அவனே கம்சனுக்கு காலன் என்பதையும் கூறி மறைந்துவிடுகிறது.

கிருஷ்ணனைக் கொல்ல கம்சன் எடுக்கும் முயற்சிகள் தோல்வியடைகின்றன. தன் அவைக்கே அவனைஅழைத்து, வஞ்சகமாக கொல்ல நினைத்த கம்சனை, கிருஷ்ணன் அவன் மடியில் அமர்ந்தபடி அழுத்தி வதம் செய்து விடுகிறான். கிருஷ்ணன் உக்ரசேனருக்கு முடி சூட்டி மீண்டும்அவரை மன்னராக்குகிறான்.

புண்டரீகம், மேளப்ராப்தியுடன் நாடகம் தொடங்குகிறது. கதா பாத்திரங்கள் ஒவ்வொருவராக அவரவர்கள் குறித்தவர்ணனை பின்னர் தொடரும், பிரவேசதருவுடன் அரங்கில் பிரவேசிக்கிறார்கள். 'ரானிஞ்சு மதுராபுர முலோ' என்று தொடங்கும் த்விபதை கம்சனை வருணிக்கிறது. பாத்ரப்ரவேசதருவுடன் (வெடல நம்ம - சாவேரி - ஆதி) கம்சன் தோன்றுகிறான். கதையைச் சுழற்றிக் கொண்டு புயல் வேகத்தில் நுழைந்து அரங்கத்தையே தன் அதிரும் நடை வகைகளால் கலங்கடித்து தன் பாத்திரத்தின் கொடூரத் தன்மையைக் கம்சனாக வேடமேற்ற குமார் வெளிப்படுத்தினார். வசுதேவரும் (அரவிந்த்), தேவகியும்(ஸ்ரீகாந்த்) பிரவேசித்து சென்ற பிறகு, நாரதர்(அனிருத்தா) வருகிறார். இங்கிருந்துதான் நாடகத்தில் கதை தொடங்குகிறது.

தேவகியிடம் உன் கருவில் வளர்பவன் மகாவிஷ்ணு என்பதைக் கூறியவர், கம்சனிடமும் சென்று செய்தியைக் கூறிவிடுகிறார். தேவகியைக் கொல்ல முற்படுகிறான் கம்சன். தேவகி அவனிடம் நீ சிறு வயது முதல் என்னை எப்படி வளர்த்தவன், மும்மூர்த்திகளும் உனக்கு சமம் ஆவார்களா என்றெல்லாம் கூறிக் கெஞ்சுகிறாள்(சரணு ஜொச்சிதினி- நீலாம்பரி- ஆதி) வசுதேவரும், அவனிடம் அவளை கொல்ல வேண்டாம் என்று கெஞ்சுகிறார். பிறக்கும் குழந்தையை ஒப்படைப்பதாக உறுதி கூறியதும் விடுகிறான். ஆனால் இருவரையும் சிறையில் அடைக்கிறான். நாடகத்தில் கம்சன் தோன்றும்போதெல்லாம் ஒரு அச்ச உணர்வு தோன்றுகிறது. தேவகி தோன்றும்போதெல்லாம் ஒரு பரிவு ஏற்படுகிறது. தளர்ந்த நடையும்,களைத்த முகமும், அயர்ந்த கண்களுமாக ஒரு கருவுற்ற பெண்ணைக் கண்முன் நிறுத்தினார் தேவகியாக வேடமேற்ற ஸ்ரீகாந்த்.

சிறையில் அடைக்கும் காவல்காரனும்(நீலகண்டன்), தேவகியைக் கவனித்துக் கொள்ள வரும் மருத்துவச்சியும் (வரதராஜன்) சோகமான நாடகப் போக்கில் சற்றே கலகலப்பை ஏற்படுத்துகின்றனர்.கிருஷ்ணன் விசுவரூப தரிசனம் தந்துகுழந்தையாக மாறும் காட்சியில் விஜய் மாதவன் விசுவரூபத்தை காட்டி, அப்படியே உடலை வளைத்துக் குறுக்கி,சிறு குழந்தையாக மல்லாந்து படுத்து கால்கட்டை விரலை வாயில் வைத்து கொள்ளும்(ஆலிலை கிருஷ்ணன் தோற்றம்) காட்சி அருமையாக இருந்தது. இரு எல்லைகளையும் காட்டும் அற்புதமான உத்தி.

பிறந்த குழந்தையைக் கொல்ல முற்படும் காட்சியில் கம்சனின் ஈவு இரக்கமற்ற தன்மையை நின்ற நிலையிலேயே படம் பிடித்து காட்டினார் குமார்.

கிருஷ்ணனை யசோதை சீராட்டி வளர்ப்பதும் (பத்சவில் துனிகன்ன - அடாணா- ஆதி) தாலாட்டுவதுமான (நந்தகோப குமாரர்- நீலாம்பரி- கண்டசாபு) காட்சிகளை நடராஜன் கற்பனை வளத்துடன் முகத்தில் பாசம் பொங்க ஆடினார்.

பூதகியும்(வரதராஜன்), சகடாசுரனும்(நீலகண்டன்) கம்சனின் கட்டளைப்படி கிருஷ்ணனைக் கொல்லவருகின்றனர். குறிப்பாக பூதகி பாத்திரத்தை வரதராஜன் தன்னுடைய சொந்த கற்பனைப்படி வளர்த்து பரபரப்பாக செய்தார். நீளமான காளிங்க நர்த்தனக் காட்சியை விஜய்மாதவன் அயராமல் ஆடி, பாராட்டைப் பெற்றார்.



மெலட்டூரில் நடைபெற்ற கம்ச சரித்திர நாடகத்தில் ஒரு காட்சி.

அக்ரூரை (மகாதேவன்) அனுப்பி பலராமனையும், கிருஷ்ணனையும் அழைத்து வரச் செய்யும் கம்சன், கிருஷ்ணனைப் பாசமுள்ளவன் போல் நடித்து மடியில் அமரச் செய்து கொல்ல முற்பட, இருந்த இடத்திலேயே அவனை அழுத்தி வதம் செய்கிறான் கிருஷ்ணன். உக்ரசேனர் (எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி) சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் மன்னராக்கப்படுகிறார். பல சுருதி, மங்களத்துடன் நாடகம் நிறைவு பெறுகிறது. நன்றாக பாடிய நரசிம்மன், வெங்கடேசன், பிரபாகரன் ஆகியோர் ஆஹிரி, கண்டா, நீலாம்பரி ஆகிய ராகங்களை சிறப்பாக கையாண்டனர். ஆண்டான்கோவில் துரை வயலினும், நெல்லை ஏ.பாலாஜி மிருதங்கமும், வெங்கடேஷ் பிரசாத் புல்லாங்குழலும் வாசித்தனர்.

நாடகம் முடிந்த பின்னரும் கூட கம்சனின் கொடூரமும், வசுதேவரின் பொறுமையும், தேவகியின் பரிதாபமான நிலையும், யசோதையின் வாத்சல்யமும் நம்மனதை விட்டு நீங்கவில்லை.

-நாரதர்.

ST. JOHN'S MATRIC SCHOOL
M.C. Road, Saradha Nagar, Thanjavur-613 004.
வெற்றி! வெற்றி!!

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| கும்பகோணம் | (1 கிராம்) | ரூ.510.00 | வெள்ளி (10 கிராம்) | ரூ.95.00 |
| திருவாரூர் | (1 கிராம்) | ரூ.510.00 | வெள்ளி (10 கிராம்) | ரூ.90.00 |